# Verified RealEstate™

Your trusted partner for buying, selling, and managing property, ensuring hassle-free service with 100% transparency.

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate

+91 9996 12 9996

**Official Property Record**

Digitally Verified Record - Powered by Verified RealEstate™



1

நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை-2 அவர்களின் நடவடிக்கைகள்
807, அண்ணா சாலை, சென்னை-600 002
முன்னிலை: டாக்டர் (திருமதி) பீலா ராஜேஷ், இ.ஆ.ப.
www.tn.gov.in
email id: dtcp@vsnl.net

ந.க.எண்.4747 / 2018 / சிபி நாள்:04.04.2018.

பொருள்: நகர் ஊரமைப்பு ஆணையர் அலுவலகம், சென்னை-2 - தொகுப்பு குடியிருப்பு கட்டடம் - கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக் குழுமம், கோயம்புத்தூர் மாவட்டம், பேரூர் வட்டம், வேடப்பட்டி பேரூராட்சி மற்றும் கிராமம், சர்வே எண்கள்.468/2A; 469/2B; 474/1B; 475/1A1-ல் 36050.00சமீ மனைப்பரப்பில் மனை அனுமதி மற்றும் அம்மனையில் அமையும் Block-A, B, C, D, E, E1-ல் தரைத்தளம் + முதல்தளம் கொண்ட தொகுப்பு குடியிருப்பு மற்றும் Block-F - Stilt + 4 தளங்கள் கொண்ட குடியிருப்பு கட்டிடம் மற்றும் கிளப் ஹவுஸ் கட்டிடம் கட்ட திட்ட அனுமதி வழங்கும் பொருட்டு தொழில்நுட்ப இசைவளித்தல் - தொடர்பாக.

பார்வை:
1. மனுதாரர் M/s.CASA GRANDE, COIMBATORE LLP, கோயம்புத்தூர் அவர்கள் விண்ணப்பம் நாள்.10.01.2018.
2. உறுப்பினர் செயலர்(பொ), கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக் குழுமம் கடிதம் ந.க.எண்.141/2018/உதிகு-2, நாள்:02.03.2018.
3. அரசாணை (நிலை) எண்.86, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள்:28.03.2012.
4. நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை ந.க. எண்.7486/2009/பிஏ2, நாள்:16.04.2009.
5. நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை ந.க. எண்.21075/2009/பிஏ1, நாள்.27.06.2012.
6. அரசாணை எண்.85, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள்:16.05.2017.
7. அரசாணை எண்.135, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள்:21.07.2017.

-----

Technical Clearance issued is valid after payment of I & A charge and permission of LPA/NTDA/Regional authority.

வழங்கப்படும் தொழில்நுட்ப இசைவு உட்கட்டமைப்பு (ம) வசதிக்கட்டணம் செலுத்திய பின்னர் (ம) உள்ளூர்/புதுநகர் மண்டல குழு அனுமதி பெற்ற பின்னர் செல்லத்தக்கதாகும்.

உத்திரவு:

கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக் குழுமம், கோயம்புத்தூர் மாவட்டம், பேரூர் வட்டம், வேடப்பட்டி பேரூராட்சி மற்றும் கிராமம், சர்வே எண்கள்.468/2A; 469/2B; 474/1B; 475/1A1-ல் 36050.00சமீ மனைப்பரப்பில் மனை அனுமதி மற்றும் அம்மனையில் அமையும் Block-A, B, C, D, E, E1-ல் தரைத்தளம் + முதல்தளம் கொண்ட தொகுப்பு குடியிருப்பு மற்றும் Block-F - Stilt + 4 தளங்கள் கொண்ட தொகுப்பு குடியிருப்பு கட்டிடம் கட்ட அனுமதி கோரி பார்வை 1 மற்றும் 2-ல் கண்ட கடிதங்கள் மூலம் உத்தேசம் பெறப்பட்டுள்ளது.

மேற்காண் தொகுப்பு குடியிருப்பு உபயோக கட்டுமான உத்தேசத்திற்கு தொழில்நுட்ப இசைவு வழங்கும் பொருட்டு மனைக்கு 1 முதல் 21 வரை என எல்லையிட்டு மனையிட ஒப்புதலும், அம்மனையில் அமையும் தொகுப்பு குடியிருப்பு கட்டிடங்கள் கீழ்கண்டவாறு அமைகின்றது.

..2.

| S. No. | Building Details | Ground Floor | 1st Floor | 2nd Floor | 3rd Floor | 4th Floor | No of Dwellings |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | A-Block - Row House | 1190.16 | 1190.02 | - | - | - | 16 |
| 2. | B – Block | 1940.66 | 2216.54 | - | - | - | 19 |
| 3. | C – Block | 1796.30 | 2050.62 | - | - | - | 22 |
| 4. | D – Block | 1805.54 | 2032.80 | - | - | - | 22 |
| 5. | E – Block | 2218.81 | 2525.86 | - | - | - | 23 |
| 6. | E1 – Block | 80.02 | 90.77 | - | - | - | 1 |
| 7. | Club House | 485.94 | 322.62 | - | - | - | - |
| 8. | (Non FSI) Security Building | 16.82 | - | - | - | - | - |

| BLOCK – F (APARTMENT) | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| S. No. | Building Details | Ground Floor | 1st Floor | 2nd Floor | 3rd Floor | 4th Floor | No of Dwellings |
| 1. | Block – F | 1097.11 (Non FSI) (Parking) | 975.88 | 975.88 | 975.88 | 975.88 | 52 |

**OSR PROVIDED - 3610.00 சமீ**

மேற்கண்ட உத்தேச தொகுப்பு குடியிருப்பு உபயோக கட்டுமானத்திற்கு சிறப்பு நிபந்தனைகள் மற்றும் நிபந்தனைகளுடன் நகர் ஊரமைப்புச் சட்டம் 1971 பிரிவு 49-ன் கீழ் உறுப்பினர் செயலர்(பொ), கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக் குழுமம் அவர்கள் திட்ட அனுமதி வழங்க தொழில் நுட்ப இசைவு அளிக்கப்படுகிறது.

ஒப்புதல் அளிக்கப்பட்ட கட்டிட வரைபடத்திற்கு க.வ/ந.ஊ.இ.எண்.69/2018 என எண்ணிட்டு அனுப்பப்படுகிறது.

<u>சிறப்பு நிபந்தனைகள்</u>

1. The project proponent / Applicant shall not commence any activity, excepting fencing of the site and construction of temporary shed for guard, without obtaining Environmental clearance under the EIA Notification, 2006 from the State Level Environment Impact Assessment Authority or the Ministry of Environment and Forests, Government of India, as applicable to the project, as per the threshold limits. Any violation from the above requirement is liable for action under section 19 of the Environment (Protection) Act, 1986.

..3.

FSI

2. கட்டிட அனுமதிக்கு இசைவளிக்கப்பட்ட இடஅமைப்பு வரைபடத்தில் கண்டுள்ள பொது உபயோக ஒதுக்கீடு திறவிடங்கள் மற்றும் அவற்றிற்கான அணுகுவழி ஆகியவற்றை தானமாக பத்திர பதிவு செய்து மனுதாரரால் சம்பந்தப்பட்ட உள்ளாட்சிக்கு ஒப்படைக்க வேண்டும். பத்திர நகல்கள் இவ்வலுவலகத்திற்கும் சம்பந்தபட்ட அலுவலகத்திற்கும் ஒருவார காலத்திற்குள் அனுப்புதல் வேண்டும்.

3. பொது ஒதுக்கீடு திறவிடத்தினை நிறுவனத்தின் உள்ளாட்சியிடமிருந்து அனுமதி பெற்று பராமரிக்க வேண்டும்.

4. பொது ஒதுக்கீடு திறவிடத்தினை சம்பந்தப்பட்ட உள்ளாட்சி தானமாக பெற்றுக் கொண்டு அதன் விபரம் இவ்வலுவலகத்திற்கு தெரிவிக்க வேண்டும். இதனை சம்பந்தப்பட்ட அலுவலகம் உறுதி செய்து கொள்ள வேண்டும்.

5. It is responsibility of the builders to ensure safe bearing capacity of the soil and adequacy of the foundations.

6. மத்திய மற்றும் மாநில அரசு துறையினரிடமிருந்து பெறப்பட்ட தடையின்மை சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் அனைத்தும் கண்டிப்பாக நிவர்த்தி செய்யப்பட வேண்டும்.

7. Planning Permission is issued in accordance with the provisions of the Town and Country Planning Act and the rules made there under and does not cover the structural stability aspects including the safety during the construction which are covered under the Building Rules under the Local bodies Act. Planning Permissions is issued subject to the condition that the applicant/developer and also the architects/Licensed Surveyors and the Structural Engineer associated with the development shall ensure that developments shall be structurally sound and adequate safety measures are taken during the process of construction.

8. Applicant should be obtain consent from Tamil Nadu Pollution Control Board Under Section 25 of the Water Act 1974 for discharge of sewage.

9. "நகர் ஊரமைப்புத் துறை சட்டப்பூர்வமாக தொழில்நுட்ப அனுமதி/திட்ட அனுமதி அளிப்பதன்மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை. தொழில் நுட்ப அனுமதி/திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் (கிரையப்பத்திரம், குத்தகை பத்திரம், பட்டா, தானப்பத்திரம் பொது அதிகார பத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது. அதன்மூலம் முதற்கட்டமாக விண்ணப்பதாரருக்கு வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது.

   சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும், விண்ணப்பதாரருக்கு சொத்தின் மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும் அதன் மேல் வேறு யாரேனும் தனி நபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக்கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத் துறை பொருத்தமான அமைப்பு அல்ல."

10. The provisions in the G.O.(Ms) No.17, Housing and urban Development (UD4(3)) Department dated: 05.02.2016 relating to installation and use of solar energy system should be followed.

11. "The Tamil Nadu Government in G.O.Ms.No.112, Housing and Urban Development Department dated: 22.06.2017 have approved the Tamil Nadu Real Estate (Regulation & Development) Act 2016. The promoter has to advertises, Market, book, sell or offer for sale, or invite persons to purchase in any manner any plot, apartment or building, as the case may be, in any Real Estate project or part of it only after registering the Real Estate project with the Real Estate Regulatory Authority"

12. Road widening of AA-100'0" scheme road and B5B5 60'0" road portion in Vedapatti DD Plan No.4 which is falling in the proposed site should be gifted to local body.

13. As per the undertaking submitted by the applicant, shelter fund should be collected in lieu of 10% of EWS reservation before issuing Planning Permission subject to compliance of the outcome of the writ petition relating to "Shelter Fee".

14. Renewal of Structural Engineer obtained from the local body should be submitted before issuing Planning Permission.

15. Necessary Clearance for Swimming Pool should be obtained as per the G.O. Ms. No.97, MAWS(MA1), dated:07.07.2015.

<u>நிபந்தனைகள் :</u>

1) உத்தேச தொகுப்பு குடியிருப்பு உபயோகக் கட்டுமானத்திற்கு Solar Water Heating System அமைக்கப்பட வேண்டும்.

2) வரைபடத்தில் உத்தேசிக்கப்பட்டவாறு வாகனம் நிறுத்துமிடம் அந்த பயனுக்காகவே பயன்படுத்தப்பட வேண்டும்

3) மனையில் காட்டப்பட்டுள்ள திறவிடங்கள் அதன்படியே நிலைநிறுத்தப்பட வேண்டும்.

4) தற்போது ஒப்புதல் பெறப்பட்ட வரைபடத்திற்கு மாறாக கட்டிடத்தில் எவ்வித மாற்றமும் செய்தல் கூடாது. மாற்றங்கள் ஏதேனும் செய்வதாக இருந்தால் இவ்வலுவலகத்தின் முன்அனுமதி பெறப்பட வேண்டும்.

5) மழைநீர் சேகரிப்பு வசதிகள் வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளவாறும், அரசாணை எண்.138, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்:11.10.2002-ன்படி கட்டிடத்தில் செயல்படுத்தப்பட வேண்டும்.

6) உத்தேச கட்டிடத்தில் இருந்து வெளியேறும் கழிவுநீர் தனியார் வாகனங்கள் மூலம் வெளியேற்றவும், உபயோகிப்போருக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதிகள் மற்றும் இதர தேவைக்கான நீர் வசதிகள் ஆகியவை மனுதாரர் தனது சொந்த செலவில் செய்து தர வேண்டும்.

7) மனையில் அமையும் குடிநீர் மேல்நிலைத்தொட்டி மற்றும் கிணறு ஆகியவற்றுக்கு கொசு தடுப்பு சாதனம் பொருத்தப்பட வேண்டும்.

8) உத்தேச கட்டுமானத்தில் விதிப்படித் தேவையான அளவுக்கு தீ தடுப்பு மற்றும் தீயணைப்பு சாதனங்கள் அமைக்கப்பட வேண்டும்.

9) அரசாணை எண்.341, ந.நி. மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.1) துறை, நாள்:3.11.2004-ன்படி செப்டிக் டேங்க்கில் "U" Trap அமைத்தல் வேண்டும்.

10) சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அறிவிக்கையின்படி உத்தேச கட்டிடத்திற்கு FLY ASH BRICKS மற்றும் Materials பயன்படுத்தப்பட வேண்டும்.

11) அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தின் நகல் (உண்மை நகல்) கட்டுமானங்கள் நடைபெறும்போது அவ்விடத்தில் அனைவருக்கும் தெரியும் வகையில் பலகையில் நிறுவப்பட்டிருக்க வேண்டும்.

12) அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் அசல் நகலுடன் ஏற்கனவே அளிக்கப்பட்ட உத்திரவு மற்றும் இவ்வாணையின் நகல் வாங்குபவர்களுக்கு வழங்கப்பட வேண்டும்.

முத்திரை இடப்பட்ட வரைபடங்கள் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

பார்வை 3, 4, 5, 6 மற்றும் 7-ல் காணும் அரசாணைகள் மற்றும் சுற்றறிக்கையின்படி உரிய நன்னிலை வரி, உள்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிக் கட்டணம் மற்றும் Shelter Fund ஆகியவற்றினை உறுப்பினர் செயலர்(பொ), கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக் குழுமம் அவர்களால் பெற்று இவ்வலுவலகத்திற்கு அனுப்பப்பட்ட பின்னர் திட்ட அனுமதி வழங்கப்படல் வேண்டும்.

உறுப்பினர் செயலர்(பொ), கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக் குழுமம் மேற்கொண்டு உத்தரவினை விண்ணப்பதாரருக்கு வழங்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

ஒப்புதல் அளிக்கப்பட்ட உத்தரவு கடிதம் மற்றும் வரைபடங்கள் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை சான்றினை அனுப்பிவைக்குமாறு உறுப்பினர் செயலர்(பொ), கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக் குழுமம் அவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

<u>இணைப்பு:</u>
வரைபடங்கள் 3 தொகுப்பு
(10 X 3 = 30 வரைபடங்கள்)

(ஒம்/-) பீலா ராஜேஷ்
நகர் ஊரமைப்பு ஆணையர்

<u>பெறுநர்:</u>
உறுப்பினர் செயலர்(பொ),
கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக் குழுமம்,
கோயம்புத்தூர்.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

5.4.18

நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர்

4/4/18

**கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக் குழும உறுப்பினர் செயலர் (பொறுப்பு)**
**அவர்களின் நடவடிக்கைகள்**
**முன்னிலை: திரு. எஸ். தனராசு, பி.இ.,**
**திட்ட அனுமதி**
**நகர் ஊரமைப்புச்சட்டம் 1971 பிரிவு 49-ன் கீழ்**

**ந.க.எண். 141/2018/உ.திகு-1** **நாள்: 30.04.2018**
**தி.அ. எண்.118("அ"முதல் "ஒ"வரை /2018**
**உள்ளாட்சியின் பெயர்: வேடப்பட்டி பேரூராட்சி**

பொருள் : **திட்ட அனுமதி** - தொகுப்பு குடியிருப்பு கட்டிடம் - கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக் குழுமம் - கோயம்புத்தூர் மாவட்டம் - பேரூர் வட்டம் - வேடப்பட்டி பேரூராட்சி மற்றும் கிராமம் - க.ச.எண்கள்.468/2A, 469/2B, 474/1B, 475/1A1-ல் **36050** சமீ மனைப்பரப்பில் மனையிட ஒப்புதல் மற்றும் உத்தேச Block A, B, C, D, E, E1-ல் தரைத்தளம் + முதல்தளம் கொண்ட தொகுப்பு குடியிருப்பு கட்டிடம் மற்றும் பிளாக் F-ல் ஸ்டில்ட் + 4 தளங்கள் கொண்ட குடியிருப்பு கட்டிடம் மற்றும் கிளப் ஹவுஸ் கட்டிடம் கட்ட நகர் ஊரமைப்பு ஆணையர் சென்னை அவர்கள் இசைவு பெறப்பட்டுள்ளது - திட்ட அனுமதி வழங்குதல் - தொடர்பாக.

பார்வை :
1. நகர் ஊரமைப்பு ஆணையர் சென்னை அவர்கள் நடவடிக்கைகள் கடிதம் ந.க.எண். 4747/2018/சிபி, நாள் 04.04.2018
2. மனுதாரர் M/s. Casa Grande Coimbatore LLP, Coimbatore அவர்கள் விண்ணப்பம் நாள் 10.01.2018
3. செயல் அலுவலர், வேடப்பட்டி பேரூராட்சி அவர்கள் கடிதம் ந.க.எண் 61/2017/ நாள் 24.01.2018
4. நகர் ஊரமைப்பு ஆணையர் (பொ) சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண். 17594/2013/Special Cell, நாள் 30.10.2013
5. கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக்குழும தீர்மானம் எண்.4 நாள் 27.04.2018
6. மனுதாரர் வளர்ச்சிக் கட்டணம் செலுத்தப்பட்டு கடிதம் பெறப்பட்ட நாள். 18.04.2018

*****

**உத்தரவு:**

கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக் குழுமம், கோயம்புத்தூர் மாவட்டம், பேரூர் வட்டம், வேடப்பட்டி பேரூராட்சி மற்றும் கிராமம், க.ச.எண்கள்.468/2A, 469/2B, 474/1B, 475/1A1-ல் **36050.0** சமீ பரப்பு கொண்ட மனைக்கு "1" முதல் "21" வரை என எல்லையிட்டு மேற்படி வரைபடத்திற்கு **<u>க.வ/ந.ஊ.இ.எண்.69/2018</u>** என எண்ணிட்டு, பார்வை 1-ல் கண்டுள்ள நகர் ஊரமைப்பு ஆணையர் சென்னை அவர்களால் திட்ட அனுமதி வழங்க இசைவளிக்கப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து அம்மனையில் அமையும்

உத்தேசம் விபரம்:

மனையின் மொத்த பரப்பு : **36050.0** ச.மீ

| S.No. | Building Details | Ground Floor | 1st Floor | 2nd Floor | 3rd Floor | 4th Floor | No of Dwellings |
|---|---|---|---|---|---|---|---|
| 01. | A Block Row House | 1190.16 | 1190.02 | -- | -- | -- | 16 |
| 02. | B -Block | 1940.66 | 2216.54 | -- | -- | -- | 19 |
| 03. | C-Block | 1796.30 | 2050.62 | -- | -- | -- | 22 |
| 04. | D -Block | 1805.54 | 2032.80 | -- | -- | -- | 22 |
| 05. | E-Block | 2218.81 | 2525.86 | -- | -- | -- | 23 |
| 06. | E1-Block | 80.02 | 90.77 | -- | -- | -- | 1 |
| 07. | Club house | 485.94 | 322.62 | -- | -- | -- | -- |
| 08. | (Non FSI) Security Building | 16.82 | -- | -- | -- | -- | -- |

Block –F (Apartment)

| S.No. | Building Details | Ground Floor | 1st Floor | 2nd Floor | 3rd Floor | 4th Floor | No of Dwellings |
|---|---|---|---|---|---|---|---|
| **1.** | **Block-F** | **1097.11 (Non FSI) (parking)** | **975.88** | **975.88** | **975.88** | **975.88** | **52** |

**OSR Provided : 3610.00 Sq.m**

மேற்கண்ட உத்தேச தொகுப்பு குடியிருப்பு கட்டுமானத்திற்கு <u>திட்ட அனுமதி எண்.</u> **118("அ"முதல்"ஓ"வரை /2018** என்ற எண்ணில் <u>**30.04.2018**</u> முதல் **5** (ஐந்து) வருட காலத்திற்கு கீழ்காணும் நிபந்தனைகளுடன் திட்ட அனுமதி அளிக்கப்படுகிறது.

**பார்வை 1-ல் கண்டுள்ள நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்கள் நடவடிக்கையில் குறிப்பிட்டுள்ள அனைத்து நிபந்தனைகளும் பொருந்தும்.**

<u>சிறப்பு நிபந்தனை-1</u>

| வ. எண் | சிறப்பு நிபந்தனைகள் |
|---|---|
| 01. | The project proponent/Applicant shall not commence any activity exceeding fencing of the site and construction of temporarily shed for guard, without obtaining environmental clearance under the EIA Notification 2006 from the state level environment impact assessment authority of the Ministry of Environment and forests Government of India, as applicable to the project, as per to threshold limits. Any violation from the above requirement is liable for action under Section 19 of the Environment (Projection) Act 1986. |

02. பொது ஒதுக்கீடு திறவிடத்தினை நிறுவனத்தினர் உள்ளாட்சியிடமிருந்து அனுமதி பெற்று பராமரிக்க வேண்டும்.

03. It is responsibility of the builders to ensure safe bearing capacity of the soil and adequacy of the foundations

04. மத்திய மற்றும் மாநில அரசு துறையினரிடமிருந்து பெறப்பட்ட தடையின்மை சான்றிதழில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகள் அனைத்தும் கண்டிப்பாக நிவர்த்தி செய்யப்படவேண்டும்.

05. Planning permission is issued in accordance with the provisions of the Town and Country Planning Act and the rules made there under and does not cover the structural stability aspects including the safety during the construction which are covered under the Building rules under the local bodies Act. Planning permissions is issued subject to the condition that the applicant/developer and also the architects / licensed surveyors and the structural engineer associated with the development shall ensure that developments shall be structurally sound and adequate safety measures are taken during the process of construction.

06. Applicant should obtain consent from Tamil Nadu Pollution Control Board Under Section 25 of the water Act 1974 for discharge of sewage.

07. நகர் ஊரமைப்புத் துறை சட்டப்பூர்வமாக தொழில் நுட்ப அனுமதி/திட்ட அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்த வில்லை. தொழில் நுட்ப அனுமதி/திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்ப தாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் (கிரையப்பத்திரம், குத்தகை பத்திரம், பட்டா, தானப்பத்திரம், பொது அதிகார பத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது. அதன் மூலம் முதற்கட்டமாக விண்ணப்பதாரருக்கு வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப் படுகிறது.

சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும், விண்ணப்பதாரருக்கு சொத்தின் மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும் அதன் மேல் வேறு யாரேனும் தனி நபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக்கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத் துறை பொருத்தமான அமைப்பு அல்ல.

08. The Provision in the G.O (Ms)No. 17, Housing and Urban Development (UD4)(3) Department Dated. 05.02.2016 relation to installation and use of solar energy system should be followed.

09. The Tamil Nadu Government in G.O.Ms No. 112, Housing and Urban Development Department Dated. 22.06.2017 has approved the Tamil Nadu Real Estate (Regulation & Development) Act 2016. The Promoter has to advertise, market, book, sell or offer for sale, or invite persons to purchase in any manner any plot, apartment or building, as the case may be, in any Real Estate Project or Part of it only after registering the Real Estate Project with the Real Estate Regulatory Authority.

10. As per the undertaking submitted by the applicant, shelter fund should be paid in lieu of 10% of EWS reservation subject to compliance of the outcome of the writ petition relating to Shelter fee.

11. Necessary Clearance for swimming pool should be obtained as per the G.O.Ms.No.97 (MAWS(MA1), dated 07.07.2015

## பொது நிபந்தனைகள்

1. திட்டஅனுமதியானது பிரிவு 49 நகர் ஊரமைப்புச் சட்டம் 1971 (சட்டம் 35-1972)-ன் கீழ் ஒப்புதல் வழங்கப்பட்டதாகும்.

2. பிரிவு 80, நகர் ஊரமைப்பு சட்டம் 1971 (சட்டம் 35-1972)ன்படி எந்த நபராவது இந்த உத்தரவு அல்லது தீர்மானத்தினால் பிரிவு 49 அல்லது 64(1)-ன்கீழ் மறுக்கப்பட்டிருப்பின் உத்தரவு அளிக்கப்பட்ட நாளிலிருந்து இரண்டு மாதத்திற்குள் நகர் ஊரமைப்பு இயக்குநர்/அரசுக்கு மேல்முறையீடு செய்யலாம்.

3. கோயம்புத்தூர் உள்ளூர்திட்டக்குழும உறுப்பினர் செயலர் திட்டஅனுமதி அளித்த பிறகு
   (i) திட்ட அனுமதி பெற தவறான விவரம் மனுதாரரால் சமர்ப்பிக்கப்பட்டிருந்தாலோ
   (ii) சட்டப்படி சரியான வழிமுறைகள் கடைபிடிக்கத் தவறியிருந்தாலோ, உறுப்பினர் செயலர், மேற்கண்ட காரணத்தின் அடிப்படையில் திட்ட அனுமதியினை மாற்றவோ ரத்து செய்யவோ உரிமையுண்டு.

4. (i) அரசாணை எண்.138 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 11.10.2002-ன்படி மழைநீர் சேகரிப்பு குழிகள் வரைபடத்தில் காட்டியுள்ளவாறு அமைக்கப்பட வேண்டும்.
   (ii) குளியல் அறை மற்றும் Wash Basin கழிவுநீர் சுத்திகரித்து கழிப்பறைகளுக்கு பயன்படுத்தும் வகையில் சாதனங்கள் பொருத்தப்பட வேண்டும்.

5. சூரிய வெப்ப கட்டமைப்பு (Solar Water Heating System) அமைக்கப்பட வேண்டும்.

6. மனையில் கட்டிடம் கட்டும்போது Fly Ash Bricks & Materials கண்டிப்பாக பயன்படுத்தப்பட வேண்டும்.

7. (i) வரைபடத்தில் காட்டியுள்ளவாறு பக்கத்திறவிடங்கள் அதன்படியே நிலைநிறுத்தப் படவேண்டும்.
   (ii) மனையில் அமையும் குடிநீர் மேல்நிலைத்தொட்டி மற்றும் கிணறு ஆகியவைகளுக்கு கொசுத் தடுப்பு சாதனம் பொருத்தப்பட வேண்டும்
   (iii) உத்தேசம் குறித்து கழிவு நீர வெளியேற்றுதல் தொடர்பாக தமிழ்நாடு மாசுகட்டுப்பாட்டு வாரிய சட்டம் பிரிவு 25 (Water Act) -ன்படி வாரிய இணக்கம் (Consent) பெறப்படவேண்டும்.

8. அரசாணை எண்.341 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 3.11.2004-ன்படி கட்டிடத்தில் U Trap in the septic tank design அமைக்கப்பட வேண்டும்.

9. கட்டிடத்தில் மாற்றங்கள் ஏதேனும் செய்வதாக இருந்தால் நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்கள் முன் அனுமதி பெறப்பட வேண்டும்.

10. மனையில் அமையும் குடிநீர் மேல்நிலைத்தொட்டி மற்றும் கிணறு ஆகியவைகளுக்கு கொசுத்தடுப்பு சாதனம் பொருத்தப்படவேண்டும்.

11. உத்தேச கட்டிடத்தில் இருந்து வெளியேறும் கழிவுநீர் தனியார் வாகனங்கள் மூலம் வெளியேற்றவும் நிறுவனம் மற்றும் பொறுப்பாளர் குடியிருப்புக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர்வசதிகள் ஆகியவற்றை மனுதாரர் தம்சொந்த செலவில் செய்துதர வேண்டும்.

12. உத்தேச கட்டுமானத்தில் விதிப்படி தேவையான அளவிற்கு தீத்தடுப்பு சாதனங்கள் பொருத்தப்பட வேண்டும்.

13. திட்ட அனுமதி வழங்கப்பட்ட வரைபடத்தின் நகலினை மனையிடத்தின் முன்புறத்தில் எந்நேரமும் பார்க்கத்தக்க வகையில் Lamination செய்து காட்சிக்கு (Display) வைக்கப்பட வேண்டும்.

14. The Applicant / developer and also the architects / Licensed Surveyors and the structural Engineer associated with the development shall ensure that developments shall be structurally sound and adequate safety measures are taken during the process of construction.

15. வரைபடத்தில் உத்தேசிக்கப்பட்டுள்ளவாறு வாகனம் நிறுத்துமிடம் அந்த பயனுக்காகவே பயன்படுத்தப்படவேண்டும்.

16. கட்டடம் கட்டப்படும் போது அரசு அங்கீகாரம் பெற்ற மின் ஒப்பந்ததாரர் மூலம் ஓயரிங் செய்யப்பட வேண்டும்.

17. கோயம்புத்தூர் பகுதியானது Seismic Zone - III ஆக வரையறுக்கப்பட்ட பகுதியில் அமைவதால் கட்டிடத்தில் நில அதிர்வை தாங்கும் முறைகள் மேற்கொள்ளப்படவேண்டும்.

18. வழங்கப்பட்ட திட்ட அனுமதிக்கு மற்றும் பயன்பாட்டுக்கு மாறாகவும் கூடுதலாகவும் மனையிடத்தில் அபிவிருத்தி செய்து கட்டிடம் கட்டப்பட்டு, அக்கட்டிடத்திற்கு/ வரிவிதிக்கப்படின், அத்தகைய மீறல்களுக்கு சம்பந்தப்பட்ட உள்ளாட்சியே (வேடப்பட்டி பேரூராட்சி உட்பட) பொறுப்பாகும் எனத் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

19. வேடப்பட்டி பேரூராட்சி எல்லைக்குள் உள்ளாட்சி சட்டத்தின்படி வரிவிதிக்கப்படுவதற்கு முன்னர் வழங்கப்பட்ட திட்ட அனுமதிக்கு மற்றும் பயன்பாட்டுக்கு மாறாகவும், கூடுதலாகவும் கட்டப்பட்ட கட்டிடத்திற்கு இவ்வலுவலகத்தால் வழங்கப்பட்ட அதிகார பகிர்வின்படி நகர் ஊரமைப்புச் சட்டம் 1971 பிரிவு 56 மற்றும் 57 ன்படி நடவடிக்கை ஏதுவாக எடுக்கப்பட வேண்டும் எனவும் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

## <u>சிறப்பு நிபந்தனை-3</u>

1. கட்டுமானங்கள் நடைபெறும் இடத்தில், பொது மக்கள் அனைவருக்கும் தெரியும் வகையில் பலகையில், வளர்ச்சிக் கட்டுப்பாட்டு விதிகளின்படி, தளப்பரப்பு விகிதம் (FSI), திறவிடங்கள் (Setback) வாகன நிறுத்தம் மற்றும் பல நிறுவப்பட்டிருக்க வேண்டும்.

2. The Provisions in the G.O.(Ms). No. 17, H & UD (UD 4(3), Department, dated 05.02.2016, relating to installation and use of Solar energy system, should be followed.
3. The Tamil Nadu Government in G.O.Ms No. 112, Housing and Urban Development Department Dated. 22.06.2017 has approved the Tamil Nadu Real Estate (Regulation & Development) Act 2016. The Promoter has to advertise, market, book, sell or offer for sale, or invite persons to purchase in any manner any plot, apartment or building, as the case may be, in any Real Estate Project or Part of it only after registering the Real Estate Project with the Real Estate Regulatory Authority.

திட்ட அனுமதி செயலாணை கடிதத்தினை விண்ணப்பதாரருக்கு வழங்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறது.

மனுதாரர் தேவையான உரிமங்களை மற்ற விதிகளின்கீழ் சம்பந்தப்பட்ட உள்ளாட்சியிடம் பெற்றுக் கொள்ள வேண்டும்.

30/4/18

**உறுப்பினர் செயலர் (பொறுப்பு)**
**கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக்குழுமம்,**
**கோயம்புத்தூர் - 12.** 30/4/18

**இணைப்பு**

1. முத்திரையிட்ட வரைபடம் -**2** தொகுப்பு
2. நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களின் இசைவாணை நகல்-1

**பெறுநர்**

செயல் அலுவலர்,
வேடப்பட்டி பேரூராட்சி,
பேரூர் வட்டம்,
கோயம்புத்தூர் மாவட்டம்.

**நகல் மனுதாரர் (உள்ளாட்சி வழியாக)**

Thiru. D. Senthilkumar,
M/s. Casa Grande Coimbatore LLP,
"Sri Dwaraka" No.1A, 2nd Floor,
B.R.Nagar Main Road,
(opp) stock exchange office,
Singanallur Post,
Coimbatore – 641005

அனுப்புநர்

திரு. எஸ். தனராசு, பி.இ.,
உறுப்பினர் செயலர் (பொ)
கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக் குழுமம்,
மாநகராட்சி வணிக வளாகம்,
சிவானந்தா காலனி,
கோயம்புத்தூர்-12.

Email: dtcpchennai@gmail.com
clpams@gmail.com

பெறுநர்

Thiru. D. Senthilkumar,
M/s. Casa Grande Coimbatore LLP,
"Sri Dwaraka" No.1A, 2nd Floor,
B.R.Nagar Main Road,
(opp) stock exchange office,
Singanallur Post,
Coimbatore – 641005

**ந.க. எண்.141/2018 உதிகு -1** **நாள்: 30.04.2018**

ஐயா,

பொருள்: **திட்ட அனுமதி** - தொகுப்பு குடியிருப்பு கட்டிடம் - கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக் குழுமம் - கோயம்புத்தூர் மாவட்டம் - பேரூர் வட்டம் - வேடப்பட்டி பேரூராட்சி மற்றும் கிராமம் - க.ச.எண்கள்.468/2A, 469/2B, 474/1B, 475/1A1-ல் **36050** சமீ மனைப்பரப்பில் மனையிட ஒப்புதல் மற்றும் உத்தேச Block A, B, C, D, E, E1-ல் தரைத்தளம் + முதல்தளம் கொண்ட தொகுப்பு குடியிருப்பு கட்டிடம் மற்றும் பிளாக் F-ல் ஸ்டில்ட் + 4 தளங்கள் கொண்ட குடியிருப்பு கட்டிடம் மற்றும் கிளப் ஹவுஸ் கட்டிடம் கட்ட நகர் ஊரமைப்பு ஆணையர் சென்னை அவர்கள் இசைவு பெறப்பட்டுள்ளது - திட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது - உள்ளாட்சியிடம் அனுமதி இறுதி ஒப்புதல் பெறுதல் - விபரங்கள் தெரிவித்தல் - சம்மந்தமாக.

பார்வை:
1. தங்கள் விண்ணப்பம் நாள் 10.01.2018
2. கோயம்புத்தூர் உள்ளூர்திட்டக்குழும தீர்மானம் எண்.4 நாள். 27.04.2018
3. கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக் குழும திட்ட அனுமதி எண். **118("அ"முதல் "ஒ"வரை /2018,** நாள்: 30.04.2018.

*****

மேற்காணும் பொருள் தொடர்பாக பார்வை 2-ல் கண்ட கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக் குழும தீர்மானத்தின்படி மேற்படி உத்தேசத்திற்கு திட்ட அனுமதி வழங்கி, செயல் அலுவலர், வேடப்பட்டி பேரூராட்சி அவர்களுக்கு பார்வை 3-ல் கண்டுள்ள இவ்வலுவலக கடிதம் மூலம் அனுப்பப்பட்டுள்ளது. எனவே இறுதி ஒப்புதல் தொடர்பாக செயல் அலுவலர், வேடப்பட்டி பேரூராட்சி அவர்களை அணுகி பெற்றுக் கொள்ளுமாறு தெரிவிக்கப்படுகிறது.

30/4/18

உறுப்பினர் செயலர் (பொறுப்பு)
கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக்குழுமம்,
கோயம்புத்தூர் - 12.

# 1920–ம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 201–வது பிரிவின்கீழ் வழங்கப்படும் உரிமம்

## வேடபட்டி பேரூராட்சி செயல் அலுவலர் அவர்களின் நடவடிக்கைகள்

## முன்னிலை:– திரு. ந. ரவிசங்கர்

கட்டிட உரிமம் எண் 14 /2018–19 நாள். 25.05.2018

பொருள்:– கட்டிட உரிமம் – கோயம்புத்தூர் மாவட்டம் – வேடபட்டி பேரூராட்சி வேடபட்டி க.ச.எண் 468/2A, 469/2B, 474/1B, 475/1A1 ஹெ. காலையில் 36050.0 சதுர மீட்டர் கொண்ட இடத்தில் உத்தேச Block A, B, C, D, E, E1 ல் புதிய தரை தளம் + முதல் தளம் கொண்ட தொகுப்பு குடியிருப்பு கட்டிடம் மற்றும் பிளாக் F-ல் ஸ்டில்ட் + 4 தளங்கள் கொண்ட குடியிருப்பு கட்டிடம் மற்றும் கிளப் ஹவுஸ் கட்டிடம் கொண்ட கட்டுமானம் அமைத்து கட்டிடம் கட்டுதல் அனுமதி வழங்கி உத்திரவு பிறப்பிக்கப்படுகிறது.

பார்வை:–

1) M/s. Casa Grande Coimbatore LLP, Singanallur Coimbatore அவர்களது விண்ணப்பம் 30.04.2018

2) கோவை உள்ளூர் திட்டக்குழும உறுப்பினர் செயலர் (பொறுப்பு) அவர்களின் நடவடிக்கைகள் ந.க. 141/2018/உதிகு–1, தி.அ.எண் 118 ("அ" முதல் "ஒ" வரை /2018 நாள். 30.04.2018

3) வேடபட்டி பேரூராட்சி மன்றத் தீர்மான எண் 08/2018 நாள். 15.05.2018

***********

உத்திரவு:–

வேடபட்டி பேரூராட்சிக்குட்பட்ட பகுதியில் புல எண் 468/2A, 469/2B, 474/1B, 475/1A1 ஹெ. காலையில் 36050.0 ச.மீ பரப்பு உத்தேச Block A, B, C, D, E, E1 ல் புதிய தரை தளம் + முதல் தளம் கொண்ட தொகுப்பு குடியிருப்பு கட்டிடம் மற்றும் பிளாக் F-ல் ஸ்டில்ட் + 4 தளங்கள் கொண்ட குடியிருப்பு கட்டிடம் மற்றும் கிளப் ஹவுஸ் கட்டிடம் கொண்ட கட்டுமானம் அமைத்து கட்டிடம் கட்டும் பணிக்கு நகர் ஊரமைப்பு ஆணையர் சென்னை அவர்களின் இசைவு பெறப்பட்டு, கோவை உள்ளூர் திட்டக் குழும உறுப்பினர்/செயலர் (பொறுப்பு) அவர்களின் திட்ட அனுமதி எண் 118/2018ன்படி கீழ்க்கண்டவாறு உத்தேச தொகுப்பு குடியிருப்பு கட்டுமானத்திற்கு திட்ட அனுமதி எண் 118/2018 ("அ" முதல் "ஒ" வரை /2018 நாள். 30.04.2018 முதல் 5 வருட காலத்திற்கு கீழ்க்கண்டவாறு கட்டிடம் கட்ட அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

| Sl. No | Building Details | Ground Floor | Ist Floor | 2nd Floor | 3rd Floor | 4th Floor | No of Dwellings |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | A Block Row House | 1190.16 | 1190.02 | -- | -- | -- | 16 |
| 02 | B- Block | 1940.66 | 2216.54 | -- | -- | -- | 19 |
| 03 | C-Block | 1796.30 | 2050.62 | -- | -- | -- | 22 |
| 04 | D-Block | 1805.54 | 2032.80 | -- | -- | -- | 22 |
| 05 | E-Block | 2218.81 | 2525.86 | -- | -- | -- | 23 |
| 06 | E1-Block | 80.02 | 90.77 | -- | -- | -- | 1 |
| 07 | Club House | 485.94 | 322.62 | -- | -- | -- | -- |
| 08 | (Non FSI Security Building) | 16.82 | -- | -- | -- | -- | -- |

Block - F (Apartment)

| Sl. No | Building Details | Ground Floor | Ist Floor | 2nd Floor | 3rd Floor | 4th Floor | No of Dwellings |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | Block-F | 1097.11 (Non FSI Parking) | 975.88 | 975.88 | 975.88 | 975.88 | 52 |

எனவே, மேற்கண்ட கோவை உள்ளூர் திட்டக் குழும திட்ட அனுமதியில் கண்டுள்ள சிறப்பு நிபந்தனைகள் வரிசை எண் 01 முதல் 11 வரையும், பொது நிபந்தனைகள் 01 முதல் 19 வரையும் சிறப்பு நிபந்தனை 03 01 முதல் 03 வரையும் உள்ள நிபந்தனைகளுக்குட்பட்டும் கீழ்க்கண்ட பேரூராட்சி நிபந்தனைகளின்படியும் 30.04.2018 முதல் 29.04.2021 வரை தொகுப்பு குடியிருப்பு கட்டிடம் கட்ட அனுமதி அளிக்கப்படுகிறது.

நிபந்தனைகள்:

1. கட்டிடம் கட்டி முடிக்கப்பட்ட தேதியை கட்டிட வேலை முடிந்த பதினைந்து தினங்களுக்குள் இவ்வலுவலகத்திற்குத் தெரியப்படுத்த வேண்டும்
2. சர்க்கார் நிலத்திலும் பொதுச் சாலைகளிலும் ஆக்கிரமிப்பு செய்யக் கூடாது.
3. இந்த உரிமத்தில் கண்ட கால அளவிற்குப் பிறகு மனு செய்து உரிமம் புதுப்பிக்காமல் கட்டிட வேலை செய்யக் கூடாது.
4. அனுமதிக்கப்பட்ட கால அளவிற்குள் கட்டி முடிக்கப்படாத கட்டிடங்களுக்கான உரிமம் புதுப்பித்துக்கொள்ள உரிய உரிமக் கட்டணம் செலுத்தி 15 நாட்களுக்குள் விண்ணப்பித்துக் கொள்ள வேண்டும்.
5. மாறுதல் செய்ய வேண்டுமானால் திட்டக்குழுமத்திற்கு இவ்வலுவலகம் மூலம் மீண்டும் வரைபடங்கள் சமர்ப்பித்து அங்கீகாரம் பெற்று கட்டட வேலை செய்ய வேண்டும்.

6. விண்ணப்பதாரர் உரிமத்தையும் வரைபடத்தையும் கட்டிடம் கட்டுமிடத்தில் வைத்திருக்க வேண்டும். பேரூராட்சி அலுவலக அதிகாரம் பெற்ற அதிகாரிகள் வந்து கேட்கும் போது காண்பிக்க வேண்டும்

7. உரிமக் கட்டுப்பாட்டிற்கும், உரிமம் பெற்ற வரைபடத்திற்கும் மாறாக செய்தாலும், நகராட்சி சட்டத்திற்கோ அல்லது வேறெந்த சட்ட திட்டங்களுக்கு மாறாக உரிமம் பெற்று இருந்தாலும், உண்மைகளை மறைத்து தவறான வழியில் உரிமம் பெற்று இருந்தாலும் இந்த உரிமம் தள்ளுபடி செய்யப்படும்.

8. கொடுக்கப்பட்ட தகவல்கள் தவறானதாக இருந்தாலோ பொது இடத்தில் ஆக்கிரமிப்பு இருந்தாலோ இவ்வனுமதி செல்லத்தக்கதல்ல.

9. இக்கட்டிடம் 29.04.2021 ம் தேதிக்குள் கட்டி முடிக்கப்பட வேண்டும். இல்லாவிட்டால் பிரத்தியேகமாக அனுமதிக் கட்டணம் செலுத்தி பெற்றபின் மேற்கொண்டு கட்டிட வேலை செய்ய வேண்டும்

10. கட்டிடத்திலிருந்து வெளியேறும் கழிவு நீரை பொதுப்பாதையில் விடாமல் உரிமதாரர் காம்பவுண்டுக்குள் செஸ்பூல் கட்டி அப்போதைக்கப்போது சுகாதார முறைப்படி சுத்தம் செய்து கொள்ள வேண்டும்.

11. மனைப்பிரிவிற்கு தேவையான வசதிகள் யாவும் மனைப்பிரிவு நில உரிமையாளரால் செய்து கொடுக்கப்பட வேண்டும். இந்த நிலப்பிரிவில் நில உரிமையாளரால் விதிகளின்படி தேவையான அனைத்து வசதிகளையும் செய்ய வேண்டும்.

12. மழைநீர் சேகரிப்பு தொட்டி கண்டிப்பாக அமைக்கப்பட வேண்டும்

13. நிலக்கரி சாம்பலில் தயார் செய்யப்பட்ட நவீன இரக செங்கல் கட்டிடத்திற்கு பயன்படுத்த வேண்டும்

14. வரிவிதிப்பு செய்ய வரும்போது மழைநீர் கட்டமைப்பு அமைத்த புகைப்படம் கண்டிப்பாக இணைக்கப்பட வேண்டும்.

15. பேரூராட்சியால் வசூலிக்கப்பட்டுள்ள கட்டணங்களில் தணிக்கைத் தடையில் ஏதேனும் வித்தியாசத் தொகை ஏற்படின் மனுதாரர் உரிய அறிவிப்பு கிடைத்த 15 தினங்களுக்குள் செலுத்தப்பட வேண்டும்.

செயல் அலுவலர்
வேடபட்டி பேரூராட்சி
கோவை – 641 007

<u>பெறுநர்:–</u>

திரு. D. செந்தில்குமார்
காசா கிராண்ட் கோயம்புத்தூர் எல்எல்பி
1A, ஸ்ரீ துவாரகா 2–ம் தளம் பிஆர் நகர் மெயின் ரோடு
சிங்காநல்லூர், கோவை – 641 005

<u>நகல்-</u>

சம்பந்தப்பட்ட வார்டு வரித்தண்டலருக்கு கட்டிடம் முடிவடைந்ததும் வரி விதிப்பிற்காக மாதாந்திர பட்டியலில் சேர்த்து அறிக்கை சமர்ப்பிக்க



# our services doesn't just end there

### Buying & Selling Services

Property Buying Assistance, Property Selling Support, Market Price Analysis, Owner Outreach and Negotiation.

### Legal & Documentation Services

Certified EC, Patta, legal opinions, property verification, due diligence, litigation solutions, and legal heir certificates.

### Property Development & Approvals

Building plan approvals, construction, layout and sub-division approvals, zone conversion, and occupancy certification.

### NRI & Investment Services

Escrow Services, Rentals, Litigation Solutions, Property Valuation and Property Management

### Compliance & Special Services

Demolition, Vaasthu checks, regularization of unauthorized buildings, and office space solutions.



# empowering your real estate decisions with smart tools

## Property Valuation & Cost Estimation

Guideline Value, Apartment Composite Value, Stamp Duty & Registration Fees Calculator, Building Value Calculator, Capital Gains Calculator, Area Unit Converter, Length Unit Converter

## Ownership, Compliance & Legal Verification

Encumbrance Certificate (EC) Search, Find Your SRO, Temple Property Check, WAQF Property Check, View Patta/Chitta, View FMB, Patta Analyzer, EC Analyzer

## Zoning & Land Use Analysis

Land Use Zone Finder, CRZ Zone Check, Aquifer Zone Check, CBA Check, EWS Check, Road Width Check, Proposed Road Widening Check, FSI Calculator

## Property Documentation & Workflow Tools

Forms & Templates, Document Generator, Document Translation, Dictionary

## Vastu & Property Management Tools

Home Vastu Shastra, Plot Vastu Shastra, Property Management

Verified RealEstate™

We're honored to be part of your real estate journey

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996
www.verified.realestate